

# அனைவருக்குமான நன்மையே ஆன்மிகம்!

**– காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீவிஜயேந்திரர்!!**

பக்திதான் பட்டிதொட்டி எங்கும் ஊடுருவி, ஆன்மிகத்தை அணு அணுவாகப் பரப்பி, தேசத்தையே செழிப்பாக்கி இருக்கிறது. ஆதி சங்கரர், ஸ்ரீமத் ராமானுஜர், ஸ்ரீமத்வர் போன்ற மகான்கள் பல்வேறு காலகட்டங்களில் அவதரித்து, பக்திப் பயிர் மேலும் தழைத்தோங்க வலுவான உரமிட்டார்கள்; விருட்சமாக வளர்த்தார்கள்.

அதன் நற்பலனைத்தான் இன்றைக்கு நாம் சுகமாக அனுபவித்து வருகிறோம். மன பாரம் அகல... ஆலயம் செல்கிறோம். மன நிம்மதி பெற... வழிபாடுகளை மேற்கொள்கிறோம்.

எத்தனையோ சறுக்கல்கள் – சவால்கள் – சங்கடங்கள் இருந்தும், உலக அரங்கில் பாரத தேசம் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால், ஒரே காரணம் – இது ஆன்மிக பூமி. எத்தனை சோகத்தையும், சுகமானதாக மாற்றிவிடும்!

ஆன்மிகத்தை, அடித்தட்டில் இருக்கிற பாமரனிடமும் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு பாரத தேசத்தில் உதித்த மடங்களும், ஆதீனங்களும் பெரிதும் பாடுபடுகின்றன.அவற்றுள் ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட காஞ்சி காமகோடி பீடமும் குறிப்பிடத்தக்க ஒன்று.




பி.சுவாமிநாதன்

கயிலாயத்தில் சிவபெருமானிடம் இருந்து ஆதிசங்கரர் பெற்ற பஞ்ச லிங்கங்களுள் ஒன்றான ஸ்ரீசந்திர மவுலீஸ்வரர்தான் காஞ்சி பீடத்தின் பிரதான வழிபாட்டு விக்கிரகம். காஞ்சி காமகோடி பீடத்தின் ஆச்சார்யர்கள் இதற்கு பூஜைகள் செய்ய வேண்டும். அதைத் தரிசிக்க பக்தர்கள் நாள்கணக்கில் மடத்திலேயே தங்குவது உண்டு. 2,500 ஆண்டுகளைக் கடந்தும் இந்த பூஜை, ஸ்ரீமடத்தில் நடந்து வருகிறது.

ஆதி சங்கரரையே முதன்மை ஆச்சார்யராகக் கொண்ட காஞ்சி காமகோடி பீடம் இதுவரை 70 ஆச்சார்யர்களைக் கண்டுள்ளது. 68–வது ஆச்சார்யராக இருந்த 'மகா பெரியவர்' ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் காலத்தில் காஞ்சி காமகோடி பீடத்தின் பெருமை உலகெங்கும் பரவியது.

அடுத்து 69–வது ஆச்சார்யராக இருந்த புதுப் பெரியவர் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். 'மகா பெரியவர்' மனதில் எழுகிற எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்து, சமூகப் பணிகளில் மடத்தின் பங்கை மகத்தானதாக மாற்றினார். இவர்கள் இருவரும் காஞ்சிபுரத்தில் பேருந்து நிலையம் அருகே சாலைத் தெருவில் அமைந்துள்ள காஞ்சி காமகோடி பீடத்திலேயே திருச்சமாதி கொண்டுள்ளனர். 'அதிஷ்டானம்' எனப்படும் இவர்களின் சமாதிகளை நித்தமும் எண்ணற்ற பக்தர்கள் நேரில் தரிசித்து குருவருள் பெறுகின்றனர். குறைகள் அகலப் பெறுகின்றனர்.



அப்போது...

புனிதம் நிரம்பிய இந்த பீடத்தின் 70–வது ஆச்சார்யராகத் தற்போது காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருப்பவர் 'பால பெரியவா' என்று அழைக்கப்படும் ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

சொந்த ஊர் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தண்டலம் என்கிற கிராமம். கிருஷ்ணமூர்த்தி – அம்பாலட்சுமி தம்பதியருக்கு 1969–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் தேதி ஆரணியில் அவதரித்தார். பெற்றோர் வைத்த பெயர் சங்கரநாராயணன்.

பள்ளிப் படிப்பையும், வேதத்தையும் கற்ற சங்கரநாராயணன் 1983–ல், அதாவது 14 வயது இருக்கும்போது சந்நியாசத்தை ஏற்றுக்கொண்டார். அதுமுதல் காஞ்சி காமகோடி மடத்தின் 70–வது ஆச்சார்யர் ஆனார்.

மூன்று ஆச்சார்யர்கள் ஸ்ரீமடத்தின் முழுப் பொறுப்பையும் கவனித்துக் கொண்டது, மகா பெரியவா திருச்சமாதி (1994) அடைவதற்கு முன்வரை!

இரண்டு ஆச்சார்யர்கள் இருந்து ஸ்ரீமடத்தின் முழுப் பொறுப்பையும் கவனித்தது, ஸ்ரீஜயேந்திரர் திருச்சமாதி (2018) ஆகும் வரை!

தற்போது ஸ்ரீவிஜயேந்திரர் மட்டும் காஞ்சி காமகோடி பீடத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்தி வருகிறார்.

50 வயதை நெருங்குவதற்கு இன்னும் சில மாதங்கள்தான் இருக்கின்றன. ஆனாலும், 25 வயதுக்குரிய சுறுசுறுப்போடும், 50 வயதுக்குரிய பக்குவத்தோடும், 75 வயதுக்குரிய அனுபவத்தோடும் செயல்பட்டு வருகிறார் ஸ்ரீவிஜயேந்திரர்.

'ராணி' வார இதழுக்காக சிறப்புப் பேட்டி வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டபோது, மறுப்பேதும் சொல்லாமல், "தினத்தந்தி 'குரூப்'பா?" என்று புன்னகையுடன் சம்மதித்தார்.

மதியமும் அல்லாத... மாலையும் அல்லாத 3.45 மணி சுமாருக்குப் பேட்டிக்காகக் காஞ்சி ஸ்ரீமடத்தை அடைந்தோம். ஸ்ரீமடத்தில் மதிய தரிசனம் முடிந்த பக்தர்கள் ஓய்வெடுக்க வேண்டிய வேளைதானே!

ஆனால், திருமணப் பத்திரிகையை சமர்ப்பிக்க... குடும்பத்தில் நடக்கப் போகிற நல்ல விஷயம் குறித்து விவாதிக்க... மகன்– மகளது படிப்பு சம்பந்தமான ஆலோசனை பெற... என்று எண்ணற்ற பிரார்த்தனைகளோடு தரிசனத்துக்காக ஆவலுடன் காத்திருந்தனர்.

ஆம்... அந்த வேளையிலும் ஸ்ரீமடம் களை கட்டி இருந்தது. "பெரியவா (ஸ்ரீவிஜயேந்திரரை இப்படித்தான் அழைக்கிறார்கள்) தரிசனம் தந்துகொண்டிருக்கிறார். சீக்கிரம் போங்கோ. அடுத்து ஏதோ பேட்டி இருக்காம்" என்று தரிசனம் முடிந்து வெளியே வருகிற பக்தர்கள், தரிசனத்துக்காகக் காத்திருக்கிறவர்களை ஆர்வமாக உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

தரிசனம் முடிந்து வெளியே வருகின்ற பக்தர்களின் கைகளில் ஸ்ரீவிஜயேந்திரர் பிரசாதமாக வழங்கிய மாம்பழம். அவர் தந்து கொண்டிருந்த அறைக்கு வெளியே பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்துத் தரப்பினரும் திரளாகக் காத்திருந்தனர்.

இதேபோல் பக்தர்கள் கூட்டம் ஒன்று உள்ளே விஜயேந்திரரின் அறையை ஆக்கிரமித்திருந்தது. அவர்களுள் வெளிநாட்டினரும் உண்டு.

பேட்டிக்காக நமக்கு அழைப்பு வந்தது.

விஜயேந்திரரைப் புகைப்படங்களில் பார்க்கின்ற தோற்றம் வேறு. நேரில் தரிசிக்கின்ற தோற்றம் வேறாக இருக்கிறது. தீர்க்கமான கண்கள். வருகின்றவர்களுக்கு ஆசி வழங்க அவ்வப்போது

மேலே உயர்ந்து கொண்டே இருக்கும் வலக் கரம். பழக்கப்பட்ட பக்தர்களைப் பார்க்கும்போது முகத்தில் ஓர் ஆனந்தம். புத்தம் புதிதாக வரும் பக்தர்களைப் பார்க்கின்றபோது அவர்களுக்கு ஆசி வழங்கி அனுப்ப வேண்டிய பொறுப்பு.

எதிரில் இருப்பவர் பேசுவதைச் செவி மடுக்கின்றபோது கண்களை அசைத்தும், மவுனமான பதிலையும் தலையசைப்பாக – புன்னகையாக வழங்குகிறார்.

சில நேரம் உயரே அண்ணாந்து பார்த்துவிட்டு விழிகளை மூடிக் கொள்கிறார். சில விநாடிகளில் விழிகளை அகலத் திறந்து புன்னகைக்கிறார்.

மகானுக்கு முன்னால் அமர்ந்திருக்கிறோம் என்கிற மரியாதை, பவ்வியம் எல்லாமே பக்தர்களின் முகத்தில் தெரிகின்றன.

ஒரு சில பக்தர்களும் உடன் இருந்தனர். 'பேட்டி ஆரம்பிக்கலாமே...?' என்று பார்வையாலும், ஜாடையாலும் நம்மைப் பார்க்கிறார்.

அடுத்த முக்கால் மணி நேரத்துக்கு நாம் கேட்ட கேள்விகளுக்கு சரளமான பதில் வந்துகொண்டே இருந்தன.

**"காஞ்சி மடத்தின் மூலமாக கல்வி, மருத்துவம், சமூக சேவை என நிறைய அறக்காரியங்களை செயல்படுத்தி வருகிறீர்கள். இவற்றை எப்படி அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச் செல்லப் போகிறீர்கள்?"**

"அறக்காரியங்கள் அத்தனையும் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அவற்றை ஆரம்பித்தவர், அவற்றுக்கு மகுடம் சூட்டியவர் மகாபெரியவா ஆவார். அவற்றுக்கான சவுகரியங்களை அவரே ஏற்படுத்திவிட்டார்.

அந்தப் பணிகளை உற்சாகப்படுத்தி, மேலும் விசாலப்படுத்தி, மேற்பார்வை செய்து சிறப்பாக நடத்த வேண்டியதுதான் எனது பணி. தேரை உருவாக்கினது பெரியவா. மக்களின் ஒத்துழைப்புடன் தேரோட்டத்தை மேன்மையாக நடத்துவதுதான் இப்போதைய பணி!"

**"இளைஞர்களுக்கு எந்த அளவுக்கு பக்தி இருக்கிறது? அடுத்த தலைமுறைக்கு ஆன்மிகத்தின் மகிமையைக் கொண்டு செல்லும் பணி எப்படி இருக்கிறது? இது பற்றிய தங்களின் பார்வை என்ன?"**

"இப்போதுள்ள இளையோர்களுக்கு பக்தியில் நிறைய ஆர்வம் வர ஆரம்பித்திருக்கிறது. ஆன்மிக சொற்பொழிவுக்கு இளம் வயதினர் நிறைய பேர் வருகிறார்கள். முந்தைய காலங்களைவிட இப்போது அதிகம் பேர், மாலை அணிந்து–விரதம் இருந்து சபரிமலைக்கு போக ஆரம்பித்துள்ளனர். தியானம், சமூக சேவையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞான அறிவு இருக்கிறது, ஆன்மிகத்தில் ஆர்வமும் இருக்கிறது. இந்த ஆன்மிக ஆர்வத்தோடு அறிவைச் சேர்க்க வேண்டும். அதற்குரிய வழிமுறைகளைச் சொல்லித் தர வேண்டும். மொத்தத்தில்... ஆர்வம் இருக்கிறது. 'எப்படிச் செய்ய வேண்டும்? எவ்வாறு எல்லோரையும் ஒன்றிணைத்து செயலாற்ற வேண்டும், பலனை எதிர்பாராமல் எப்படி செயல்பட வேண்டும்?' என்பதைக் கற்றுத் தர வேண்டும்.


லவுகீகமாக இருந்தால் பலனை எதிர்பார்த்துச் செய்ய வேண்டியது இருக்கும். தர்ம காரியங்கள் என்றால், எதையும் எதிர்பாராமல் கடமை உணர்வோடு செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தை உருவாக்க வேண்டும். உழவாரப் பணி செய்ய வேண்டும். அதை 'பக்தி' எண்ணத்தோடு செய்ய வேண்டும். சான்றிதழோ, பாராட்டோ கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யக்கூடாது.


இளையோர்களுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது. நல்ல பயிற்சியும், முயற்சியும்தான் தேவை. அவற்றை சொல்லித் தர வேண்டும். 'மெஷின்', 'கிராபிக்ஸ்', 'அனிமேஷன்' மூலமா நாம பார்க்கிற 'ரிசல்ட்' வேற! அதாவது, மைதானத்தில் விளையாடுவதும், 'கம்ப்யூட்டரில்' விளையாடுவது என்பதும் வேறு வேறு. அது போன்று, பணி செய்யும்போது இளைஞர்களுக்கு நமது கலாச்சாரம், பாரம்பரியத்தைப் பற்றிய பெருமையும், நம்பிக்கையும் இருக்க வேண்டும்.

கூடவே பயிற்சியும் அவசியம்! அதாவது... தேசபக்தியும், தெய்வபக்தியும் ஒன்று சேர்ந்து வளர்வதற்கு பயிற்சி அளிக்க வேண்டும். எல்லா சமுதாயத்தினரும், சமயத்தைச் சார்ந்தவர்களும் ஒற்றுமையாக இருந்து தேசத்தை முன்னேற்ற வேண்டும். அதற்கு பயிற்சி கொடுப்பது அவசியம்.



நம்முடைய தேவாரம், பிரபந்தம், புராணங்களான ராமாயணம், மகாபாரதம் மற்றும் பாகவதம் போன்றவற்றால் கலாச்சார தனித்தன்மையைப் பாதுகாக்க வேண்டும். தன்மையோடு இயங்க வேண்டும். சில விஷயங்களில் தனித்து இயங்கக்கூடாது. இயங்கவும் முடியாது. தன்மை என்பது பெருந்தன்மை. அதோடு இயங்கினால் எல்லோரும் நல்லபடியாக வேலை செய்வார்கள்.


சைவம், வைஷ்ணவம் இரண்டையும்







ஊக்குவித்தாலும்... 'திருப்பாவை' – 'திருவெம்பாவை', உழவாரப் பணி, கண் மருத்துவம்...இவை எல்லாம் பொது சேவைக்காக ஆரம்பிக்கப்பட்டவை. எல்லாரையும் ஈடுபடுத்தும் திட்டங்கள்.


பூசாரிகள், குருக்கள், பட்டாச்சாரியார்கள் என எல்லோருக்கும் உதவி செய்வதோடு, நம்முடைய கோவில்களில் ஆன்மிக ரீதியாக, தினசரி விளக்கு ஏற்றப்பட்டு, நைவேத்தியம் செய்யப்பட்டு, மணியோசை ஒலிக்க வைத்து நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

அந்த ஆகம சாஸ்திரத்தைக் காப்பாற்ற வேண்டியது முக்கியமான பணி. இது மாதிரியான கட்டுமானமோ... இத்தகைய சிற்பக் கலையோ இந்தியாவின் மற்ற பகுதிகளில் விரிவான அளவில் இல்லை.காஷ்மீர் உள்ளிட்ட வடக்கே உள்ள சில கோவில்களில் அத்தகைய ஏற்பாடுகள் உள்ளன. அவையும்கூட சிதைந்த நிலையிலோ... உடையும் நிலையிலோ இருக்கின்றன.

தமிழகத்தில்தான் சிற்பங்கள், கோபுரங்கள், மண்டபங்கள் என அழகான கோவில் நிர்மானங்கள் இருக்கின்றன. தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் போன்ற சிறந்த கோவில்கள் உள்ளன. பூஜை செய்யும் கலை, பூ கட்டும் கலை, சிற்பக் கலைகள், தாள வாத்தியக் கலை உள்ளிட்டவற்றை காப்பாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை கோவில்கள் ஒரு ஸ்தாபனம்! அந்தக் கோவில்கள் பூஜை முதல் கலைகள் வரை அனைத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முறையாகவும், முழுமையாகவும் நடைபெற வேண்டும். அதாவது, தினசரி பூஜைக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். திருக்குடை பிடித்து, உற்சவரை தோளில் சுமந்து 'ஸ்ரீபாதம்' தாங்கும் பணிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் சுமைதாங்கிக் கற்கள் உண்டு.

ஜெயசத்குரு ஸ்ரீசாய் பக்தி குருகுலம்



சீரடி பாபா புட்டபர்த்திபாபா ஆத்மார்த்த ஆசீர்வாதம் பெற்றவர் உங்கள் வாழ்க்கை உயர ஒரு வழிகாட்டி

சித்தர் அருள் பாபாஜி

வாழ்வு வளம் பெற சகல அதிர்ஷ்டம் பெற ஆன்மீகத்தாலும் மூலிகைகளாலும், சகலப்பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கிறார். நினைத்த காரியம் வெற்றிபெற, திருமணம் தடை நீங்க, குழந்தை பாக்கியம் பெற, தொழில் வியாபாரம் பெருக, எதிரிகளால் வரும் செய்வினை கோளாறு நீங்க, தீராத நோய் விடுபட செவ்வாய் தோஷம், நாகதோஷம், வாஸ்து தோஷம் விடுபட மாந்திரிக பிரச்சனை விலக கல்வி, சினிமாதுறை, அரசியல், தொழில் அதிபர்கள் இவரை சந்தித்து வெற்றி பெற்று உள்ளனர்.

சித்தர் அருள் பாபாஜி

புதிய எண்:48,சாரங்கபாணி தெரு, (காமராஜர் நினைவு இல்லம் அருகில்) தி.நகர், சென்னை-17.

செல்: 9551924628, 7299163628

முன்பதிவு பெற்று வரவும் (1.00 pm - 6.00 pm பார்வை நேரம்) வெள்ளி, ஞாயிறு விடுமுறை

வெளியூர், வெளிநாடு வசிப்பவர்கள் ஜாதக நகலுடன் 500க்கான D.D/M.O வுடன் தொடர்பு கொள்ளவும்.

Email:join@srisaibakthi.org. Web:www.srisaibakthi.org

'சாய் டிவி'யில் தினந்தோறும் காலை 11 மணிக்கு பாபாஜியின் நிகழ்ச்சியை காணத்தவறாதீர்கள்!

சுமந்து வரும் பாரத்தை வைப்பதற்காக மூன்று கல் வைத்திருப்பார்கள். பாரம் தூக்கி வருபவர்களுக்கு உதவுவதற்கான மனித நேயத்தின் வெளிப்பாடுதான் இத்தகைய சுமைதாங்கிகள். பக்கத்திலேயே கருங்கல் இருப்பதையும் பார்த்திருக்கலாம். இவை மாடுகள் தங்கள் உடலை உரசிக்கொள்வதற்காக வைக்கப்பட்டவை.

மனிதர்களாக இருந்தால் கைகளால் சொறிந்து கொள்வார்கள். யாகம் செய்யக்கூடியவர்கள் நகத்தைப் பயன்படுத்தக்கூடாது என்பதால் மான்கொம்பு மூலமாக உடலை சொறிந்துகொள்வார்கள். பிராணிகள் இப்படி கல்லில்தானே தேய்த்துக்கொள்ள முடியும். கால்நடைகளைக் கட்டுவதற்காக கருங்கல் தூணில் இரண்டு ஓட்டைகள் போட்டு வைத்திருப்பார்கள்.

மனிதர்கள் இறங்கி தண்ணீர் குடிப்பதற்காகவும், குளிப்பதற்காகவும் குளங்களில் படிக்கட்டுகள் இருக்கும். அதன் மறுபக்கம் சரிவான பாதை அமைக்கப்பட்டிருக்கும். செய்யாறு குளத்தில்கூட இதைப் பார்க்கலாம். இது மாடுகள் இறங்கி நீராடுவதற்கும், தண்ணீர் குடிப்பதற்குமானது.



வாழ்வதற்கான உபதேசங்கள் இந்து சமயத்தில் ஏராளமாக இருக்கின்றன. அது மக்களைச் சென்றடைய வேண்டும்.

மக்களாகச் சென்று பார்த்தது அந்தக் காலம். மக்களைச் சென்று பார்க்க வேண்டியது இந்தக் காலம். தானாக பாதயாத்திரை செல்வது முற்காலம். இப்ப... நாம்தான் மக்களை நேரில் பார்த்துச் சொல்ல வேண்டும். நம்மிடத்திலே மதிப்பு மிக்க வைரம், தங்கம் இருந்தாலும்... ‘ஆன்மிகம் நமக்குத் தேவையில்லை’ என்கிற வைராக்கியம் மட்டும் இருக்கக்கூடாது. விரோதம் இல்லாமல் அன்பு–ஆன்மிகம் மூலமாக அறநெறிகளைப் பரப்ப வேண்டும்.

தமிழ்நாட்டுக்கு பெரிய வரலாறு இருக்கிறது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் வரலாறும் உண்டு. நல்லது செய்தவர்கள் நிறைய பேர் இருந்திருக்கிறார்கள். அந்த வரலாற்று உண்மைகளை, உண்மையான வரலாற்றை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

உலக வளர்ச்சி, நமது மன வளர்ச்சி என இரண்டு உண்டு. மனம் வளர்ச்சி பெற்றால்தான் மனிதன்



நோக்கம் என்னவெனில்... மனிதர்களுக்கும், பிற ஜீவராசிகளுக்கும் நன்மை என்பதுதான். இதுவே இந்து மதத்தின் எண்ணம்; மையக் கருத்து! அதாவது, அனைவருக்கும் நன்மை அளிப்பதே ஆன்மிகம். அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதுதான் எண்ணம். இந்தக் கருத்துகளை இளைஞர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

கலாச்சாரத்தை வெறும் கட்டிடங்களை மட்டும் வைத்து கணக்கிடக்கூடாது. அது மனிதர்கள் கூடுகிற மையம்... இடம் மட்டுமே! நல்ல எண்ணத்தை உருவாக்கக்கூடிய இடங்கள் கோவில்கள். ‘நான் நல்லவனாக இருக்க வேண்டும்; தான–தர்மங்கள் செய்ய வேண்டும்; பெரியவர்களை மதிக்க வேண்டும்; சிறுவர்களை நேசிக்க வேண்டும் என்கிற அன்பை பரிமாறக்கூடிய, அன்பின் பரிணாம வளர்ச்சியை உருவாக்கக்கூடிய இடமே ஆலயங்கள். கோவிலுக்கு வர வர அன்பு வளர வேண்டும். அதற்கு வேண்டிய இலக்கியங்களைப் போதிக்க வேண்டும்.

ஆசாரக்கோவை, அபிராமி அந்தாதி, காமாட்சி விருத்தம், திரிகடுகம், திருக்குறள், பகவத் கீதை, பாகவதம்... இதுபோன்ற எத்தனையோ இலக்கியங்கள் உள்ளன. அவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். மனிதன் மனிதனாக வளர்ச்சி பெறுவான். அதற்கு இந்து மதத்தை எளிமையாக வளர்க்க வேண்டும். எளியோருக்கும் புரிய வைக்க வேண்டும். இளைஞர்களைப் பொருத்தவரை திறமை, ஆர்வம் இருக்கிறது. அதோடு பயிற்சியும், முயற்சியும் வேண்டும். பொறுமையாக முன்னேற வேண்டும்.

வாழ்க்கையின் நெறிமுறையாக அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்து சமயம் நிம்மதியை விரும்பி நல்ல வழியைக் காண்பிக்கிறது. கோவில் கோபுரத்துக்கு எப்படி ஐந்து நிலை இருக்கிறதோ... அதேபோன்று மனித வாழ்க்கைக்கு நான்கு நிலைகள் உள்ளன. மாணவ–மாணவிகளின் கல்விப் பருவம் என்றாலும், இல்லற வாழ்க்கையானாலும், முதிர்ந்த வயதின் அமைதியான தருணம் என்றாலும், நான்காவதான ஞானநெறியானாலும் (பாலப்பிரஸ்தம், கிரஹஸ்தம், பிரம்மச்சரியம், சன்னியாசம்)... மேற்கண்ட இந்த நான்கு நிலைகளிலும் ஆன்மிகத்தின் நிலைகளை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்” என்றார் ஸ்ரீவிஜயேந்திரர்.

மகா பெரியவருடனான மறக்க முடியாத அனுபவம், காஞ்சி மடத்தின் அடுத்த பீடாதிபதி பற்றிய கேள்விகளுக்கும் தொடர்ந்து பதில் தருகிறார்.

– மகதன்

(அவை... அடுத்த இதழில்)